# பத்திரிக்கை செய்தி

பெரம்பலூர் ஜோசப் கண் மருத்துவமனை, விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், கடுவனூர் மற்றும் நைனார்பாளையம் ஆகிய இரண்டு கிராமங்களில் இலவச கண் பரிசோதனை மருத்துவ முகாம் நடத்தி, முகாம்களில் கலந்து கொண்ட கிராம மக்களில் 68 நபர்களுக்கு கண் பார்வை குறைபாடு இருப்பது கண்டறிந்து, அவர்களில் 66 நபர்களுக்கு பெரம்பலூர் ஜோசப் கண் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களில் சுமார் 65 நபர்களுக்கு பார்வை இழப்பு ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக இரண்டு கண்களும் பாதிக்கப்பட்டவருக்கு ரூ.5 இலட்சமும் ஒரு கண் மட்டும் பாதிக்கப்பட்டவருக்கு ரூ.1 இலட்சமும் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி மேற்சொன்ன மருத்துவமனையில் ஒரு கண் மட்டும் பாதிக்கப்பட்டுள்ள 65 நபர்களுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 65 இலட்ச ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இந்த முகாமை நடத்த விழுப்புரம் மாவட்ட ஆட்சியரிடம் முன்அனுமதியோ அல்லது மாவட்ட சுகாதாரத் துறை அலுவலர்களிடம் முன் அனுமதியோ பெறவில்லை. தனியார் மருத்துவமனைகள் அறுவை சிகிச்சை செய்தாலும் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் போது அரசுக்கு அவப்பெயர் ஏற்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நிதி உதவி வழங்கவும் நேரிடுகிறது.

தமிழ்நாட்டில் தனியார் மருத்துவ நிலையங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மாவட்டத்தில் மருத்துவ முகாம்கள், தடுப்பூசி முகாம்கள் போன்ற முகாம்களை நடத்துவதற்கு முன் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முறையாக விண்ணப்பித்து அவரிடமிருந்து அனுமதி பெற்ற பின்னர்தான் முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், மாவட்ட ஆட்சியர் அளிக்கும் அனுமதியின் நகல் மாவட்ட சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் மற்றும் துணை இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும், இத்தகைய முகாம்களை இணை இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் மேற்பார்வையிட வேண்டும் என்றும் அரசாணை (நிலை) எண்.164 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 31.08.2006–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. தனியார் மருத்துவ நிலையங்கள் / தன்னார்வ தொண்டு நிலையங்கள், ஒரு மாவட்டத்திற்கு மேல் பல மாவட்டகளில் இத்தகைய முகாம்களை நடத்த முடிவு செய்தால், அவர்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு இயக்குநருக்கு விண்ணப்பம் செய்து

அவரிடமிருந்து முன் அனுமதி பெற்று முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் மேற்கண்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மேற்கண்ட அரசாணையின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் / பொது சுகாதாரத் துறை இயக்குநரிடமிருந்து முன் அனுமதி பெறாமல் மருத்துவ முகாம்கள் நடத்துகிறார்கள்.

இனி வரும் காலங்களில் மருத்துவ முகாம்கள் நடத்த மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தும், பல மாவட்டங்களில் முகாம்கள் நடத்த பொது சுகாதாரத் துறை இயக்குநரிடமிருந்தும் முன் அனுமதி பெற்றுதான் முகாம்கள் நடத்தப்பட வேண்டும். அனுமதி பெறாமல் மருத்துவ முகாம் நடத்தப்பட்டால் அத்தகைய மருத்துவ நிலையங்கள் / தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

எம். ஆர். கே. பன்னீர்செல்வம்
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9